போது, இப்போதுள்ள நிலையில் ஆண்டிற்கு ஒரு முறைதான் ஒரு பள்ளியை ஆய்வு செய்ய முடிகின்றது என்ற நிலை இருக்கும்போது, இந்த ஆய்வுகளை அதிகப்படுத்த முடியுமா என்று அரசு ஆராயுமா, இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நமது மாநிலத்தில் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக, பள்ளித் துணை ஆய்வாளர்களின் எண்ணிக்கையும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒருவர் என்ற விகிதத்தில் இருக்க வேண்டும் என்பது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது. எனவே இந்த ஆய்வுகள் அடிக்கடி நடைபெற வேண்டும், மிகச் சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெற வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். அதற்கு ஏற்றபடி அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்பட வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், இப்போது அங்கே கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகள் இருக்கின்றார்கள். இவர்களைத் தவிர ஒன்றியங்களி லுள்ள பள்ளிகளை ஆய்வு செய்ய பள்ளித் துணை ஆய்வாளர்களும் இருக் கின்றார்கள். இப்படி ஒரே கல்வி நிலையத்தை ஆய்வு செய்வதற்கு இரண்டு அதிகாரிகள் தேவைதானா, இதில் சிக்கனத்தை முன்னிட்டு இதை ஒன்று படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். இந்த இரு அதிகாரிகளுடைய பணிகள் எந்தெந்த முறையில் வரையறுக்கப்படலாம் என்பதுபற்றி கல்வித் துறை ஆராய்ந்து வருகின்றது ஆராய்ந்து முடிவெடுத்த பின்னர், அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்படும்.

Revised Percentage of Grant to Aided Training Colleges

* 34 *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether G.O. Ms. No. 575, Education, dated 2nd May 1972 laying down revised percentage of grant to Aided Arts and Science Colleges will apply to Aided Training Colleges also; and

(*b*) if not, the reasons therefor ?

[1973 நவம்பர் 22

மானியம் பெறும் பயிற்சிக் கல்லூரிகளுக்குத் திருத்த மானிய வீதம்

திரு. சா. கணேசன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கல்வித் துறையின் 2—5—1972 ஆம் நாளிட்ட 575 ஆம் எண் அரசாணையில், மானியம் பெறும் கலைக் கல்லூரிகளுக்கும், அறிவியற் கல்லூரி களுக்கும் விதிக்கப்பட்டுள்ள திருத்த மானிய வீதம், மானியம் பெறும் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் பொருந்துமா ?

(இ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த அரசு ஆணை உதவி பெறும் பயிற்சிக் கல்லூரிகளுக்கு தற்போது பொருந்தாது. தனியார் பள்ளிகளுக்கான கட்டணங்களை வசூலிப்பது கல்லூரிக்குக் கல்லூரி வேறுபட்டு வருகின்றது. ஆகவே குறிப்பிட்டுள்ள அந்த ஆணை தனியார் பயிற்சிக் கல்லூரிகளுக்கு வறபுறுத்தப்படுவதில்லை.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, கலைக் கல்லூரிகளுக்கும் அறிவியல் கல்லூரிகளுக்கும் கொடுக்கப்படும் மானியத்தை, அதைவிட அதிகப்படியான கவனம் செலுத்தி ஆசிரியர்களைப் பயிற்சி செய்யக்கூடிய தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு, மறுப்பது நியாயம் தானு, பொருத்தமானதுதானு, அதனல் ஏதேனும் நன்மையுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இத்தகைய வேறுபாடுகள் இருப்பதன் காரணமாகத்தான் இந்த அரசு ஆணை அதற்குப் பொருந்தாது என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒவ்வொரு விதமான கட்டணத்தை விதித்திருக்கின்றுர்கள். சில கல்லூரிகளைப் பொறுத்த வரையில், கட்டணமே இல்லாமல் இருக்கின்றது. இதையெல்லாம் ஒருநிலைப் படுத்த வேண்டும் என்ற கொள்கைதான் கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த நிலையில்தான் இந்தப் புதிய உத்தரவு இந்தக் கல்லூரிகளுக்குப் பொருந்தாமல் இருக்கின்றது. விரைவில் இதுபற்றி ஆராய்ந்து தக்க முடிவெடுக்கப்படும் என்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, பெரும்பாலான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஆண்டிற்கு 'ஸ்பெஷல் ஃபீஸ்' ரூபாய் 75, 80, 90 என்று வாங்கு கின்றதைத் தவிர வேறு கட்டணமே வாங்குகின்றதில்லை என்பதை அரசு நன்கு அறியும் என்று கருதுகிறேன். எனவே இப்படிக் கட்டணமே இல்லாது

1973 நவம்பர் 22]

ஆசிரியர்களைப் பயிற்சிவிக்கின்ற பொறுப்பு மிக்க அப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு—அதிலும் இப்படிப்பட்ட கல்லூரிகள் நமது மாநிலத்தில் மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் இருக்கின்றன என்ற நிலைமையில்—இந்தச் சலுகையை அளிக்கும் வகையில் இதைப் பரிசிலித்துத் தக்க முடிவெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது தனியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்ற முறையில்தான் இந்த ஆணை அதற்குச் செல்லாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதுபற்றி மேலும் தனியாக ஆராயப்பட்டு வருகின்றது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, கலைக் கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகள், இவற்றின் நிர்வாகத்தினரெல்லாம் இந்த அரசு ஆணை 575-ன் படி இதற்கு முன்னால் இருந்த மூன்றில் இரண்டு பங்கு கிராண்டு கொடுக்கும் காலத்தில் ரூபாய் 240 கட்டணம் வாங்கினாலும் அரசாங்கக் கணக்கில் ரூ. 90 வரவு என்று கணக்கிட்டு, அதைத்தான் வரவாகக் கொண்டு கிராண்டு வழங்கியது. நிர்வாகத்தினருக்கு இதற்கு முந்தைய ஆணைதான் நன்மை பயக்கக்கூடியதாக இருப்பதாகவும் இப்போதுள்ள இந்த ஆணை நன்மை பயக்கக்கூடியதாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சிக் கல்லூரிகளுக்கு முந்தைய ஆணை பயனுள்ளதாக இருக்கின்றது. எனவே பாதிக்கப்பட்டுள்ள இந்த நிலைமைகளை அறிந்து இதற்கு வேண்டியதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஏற்கெனவே 'நோஷனல்' என்று வைத்துக் கொண்டு உண்மையாக வாங்கும் பணம் ஒன்றாகவும் எழுதும் பணம் வேறு ஒன்றாகவும் இருப்பதால், அது எந்த வகையிலும் பொருந்தாது, நியாயத்தின் அடிப்படையில் அது அமைய வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் எவ்வளவு வரவு, எவ்வளவு செலவு என்பதையெல்லாம் பார்த்து, அதற்குப் பிறகு பற்றாக்குறை இருந்தால், அதில் ஒரு பகுதியை, 80 சதவிகிதத்தை அரசு கொடுக்கும் என்ற முறை வைக்கப்பட்டிருக்கின்றது. இதை மற்ற பயிற்சிக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்துவதுபற்றித்தான் இப்போது நம் முன்னுள்ள கேள்வி. இந்தப் பயிற்சிக் கல்லூரிகளும் பல்வேறு விதமாக இருப்பதால், அதுபற்றி ஆராய்ந்து அதைக் கொண்டுவருவதற்கான முறையில் அரசாங்கம் சிந்தித்து வருகின்றது. ஆராய்ந்த பின்னர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.